அறிக்கையின் 39 முதல் 41 வரையுள்ள பக்கங்களில் "41—பாசன மூலதனச் செலவு" என்கிற கோரிக்கையின் கீழ் கொடுக்கப் பட்டுள்ள புதிய திட்டங்களின் விவரங்களை மாண்புமிகு உறுப் பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். வீட்டு வசதி வாரியம், போலந்து நாட்டின் தொழில் நுட்ப உதவியையும் நிதி உதவியையும் பெற்று என்னூரில் புழை கான்கிரீட் தொழிற் சாலை ((Cellular Concreae Plant)) ஒன்றை நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் இதற்கான பொறிகளைப் பெறலாமென எதிர்பார்க்கப்படுவதால், இப்பொறிகளின் விலையின் நிமித்தம் மாநில வீட்டு வசதி வாரியத் திற்கு ஒரு கோடி ரூபாய் கடன் வழங்க தற்போதைய துணை மதிப் பீடுகளில் நிதி ஒதுக்கம்செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகக் கருதப்பட்டுள்ளதால், இத் திட்டத் திற்கென இப்போது வகை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் முழு வதும் இந்திய அரசிடமிருந்து கடனாகப் பெறப்படும்.

மாநிலப் போக்குவரத்துத் துறை மேலும் பல பேருந்து வண்டி களை வாங்கவும், ஏனைய கட்டிடப் பணிகளுக்காகவும், பயணச் சீட்டுகளை அச்சடிப்பதற்கான தனி அச்சகம் ஒன்றை நிறுவவும் அதற்கு 48 லட்சம் ரூபாய்க்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யும் படியும் வேண்டப்படுகிறது.

நமது புதிய நான்காம் திட்டத்தில் மேற்கொள்ளக் கருதியுள்ள முக்கியத் திட்டங்களில் ஒன்று சேலம் இரும்புக் கனிகளை வெட்டி யெடுப்பதைக் குறித்ததாகும். சேலத்தில் உருக்காலை ஒன்றை நிறுவுவதற்கு முன்னோடியாக, இரும்புக் கனிகளினின்றும் அயச் செறிவுருள்கள் திரட்டும் (Pelletisation and Concentration) வாய்ப்புகளை ஏற்படுத்துவது உட்பட, கஞ்சமலைக் கனியிருப்பு வளங்களைப் பெருக்கும்வகையில் திருவாளர்கள் எம்.என். தஸ்தூர் அண்டு கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் என்கிற நிறுவனத்தார் விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகும் செல விற்காக இத்துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கியுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள பிற திட்டங்கள் பற்றிச் சிறப்பான எந்த விளக்கமும் தேவையில்லையென்று கூறி, இவற்றை இம்மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

7. அரசினர் மசோதா

தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப் பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா. (சட்டப் பேரவை மசோதா எண் 3/69.)

*மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தாற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 3/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

* 28—1—1969 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

1969 பிப்ரவரி 24] [திரு. ஓ. பி. ராமன்]

1949-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள்மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் செல்திறன் கால அளவு 1969 ஜனவரி 25-ம் நாளன்று முடிவடைந்தது. அதன் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு அதாவது 1974 ஜனவரி 25-ம் நாள் முடிய நீட்டிப்பதே இம்மசோதாவின் நோக்கமாகும்.

போர் முயற்சிகள் சம்பந்தப்பட்ட உற்பத்திக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கென மின் சக்தியைச் சேமித்து வைக்கும் நோக்கத்துடன், சென்ற உலகப் பெரும் போரின்போது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் இந்திய அரசு, மின்சக்தி வழங்கல்மீது கட்டுப்பாடு ஆணைகளை முதல்முதலாக விதித்தது. போர் முடிந்த பிறகு, தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் மின்சக்தி சம்பந்தமாகக் கட்டுப்பாடு விதித்தல், நிலைப்படுத்துதல், மேல்வரி விதித்தல் போன்ற ஆணைகள் தொடர்ந்து செயலில் இருந்தன. அச்சட்டத்தின் செல்திறன் கால அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின் இணைப்பின் உற்பத்தித் திறன் இரண்டாவது திட்டத்தில் 256 மெகா வாட்டிலிருந்து 571 மெகா வாட்டாக உயர்ந்தது. நெய்வேலி மின்சக்தி உட்பட இப்போது அது 1,470 மெகா வாட்டாக உள்ளது. இனி அடிக்கடி மின்சார வெட்டு நிகழாதிருப்பதற்கு ஆவன செய்து வருகிறோம். கூடுதலான மின்சக்தி நிலையங்களைத் துவக்குவதன் மூலம், மின் இணைப்பிற்குக் கிடைக்கும் அனல் மின்சார அளவிற்கும் நீர் மின்சார அளவிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் குறைப்பதன் மூலமும் மின்விசை உற்பத்தியைப் பெருக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கிணங்கவே எண்ணூரில், 340 மெகா வாட் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ஒன்றையும் கல்பாக்கத்தில் 400 மெகா வாட் திறனுள்ள அணு மின்சார நிலையம் ஒன்றையும் நிறுவும் திட்டம் தற்போது செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உச்ச உபயோக வேளையில் மின்சக்தி வழங்கல் மீது அவ்வப்போது தேவைப்படும் கட்டுப்பாடுகள் விதிக்கும் ஆணைகளும் மின்சக்தி வழங்கலுக்காகக் கட்டணங்கள் விதிக்கும் ஆணைகளும், தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப்பெறுதலும் குறித்த (தாற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின்கீழ் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன. எனவே, இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பது அவசியமென அரசாங்கம் கருதுகின்றது. 1910-ம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்புகளை விரிவாகப் பரிசிலனை செய்கிற வரையில், இச்சட்டத்தின் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க இந்திய அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இரண்டாம் பிரிவு, மூன்றும் பிரிவு குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move,

'That the Bill be passed.'

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட்டது.

8. ஆளுநரின் பேருரைமீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவருகிறவர் கள் தங்களுடைய திருத்தங்களை முன்மொழியலாம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I wish to move the following amendment :—

'*Add* at the end, the following :

"but regret to note that no mention is made about the growing industrial unrest, educated unemployment, the measures taken for the prevention of the agrarian unrest in Thanjavur and about the break-down of the law and order situation in the State and in particular during the recent bye-election to the Nagercoil Parliamentary Constituency".'

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to move the following amendment :—

'*Add* at the end, the following :

"but regret to note that the Governor's Address has totally failed to give any indication to this House whether and if so when the Government is going to place before this House the findings of the various reports like the ones on City slum fires and the City students-busmen clash which took place last year".'

THIRU D. S. AUTHIMOOLAM : Sir, I second it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. இராமமூர்த்தி அவர்கள் அவர்களுடைய திருத்தத்தை முன்மொழிவார்கள்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் திருத்தம் நீண்டதா யிருப்பதால், அவ்வளவையும் படிக்காமல் திருத்தத்தை முன் மொழிகிறேன் என்று அவர்கள் சொல்லிவிடலாம்.